## பணமும் வங்கித் தொழிலும்

1979 இல் 11 சதவீதமாக முகாமைப்படுத்தக் கூடிய ஒரு எல்லைக்குள் நன் நிலையிலிருந்த பண விரிவாக்கம் 1979இல் பண நிரம்பல் 29 சதவீதத்தினுல் வளர்ச்சியடைந்த போது எதிர்மாறுக அமைந்தது. இது பெருமளவுக்கு (தேறிய) வெளிநாட்டு வங்கிச் சொத்துக்களினதும் அரசிற்கான கொடுகடன்களினதும் வளர்ச்சியின் காரணமாகவே ஏற்பட்டது. வட்டிவீதத் திருத்தங்களினுல் 1977ஆம் ஆண்டிலிருந்து கவனிக்கப்பட்டு வந்த போக்கின் தொடர்ச்சியாக, வர்த்தக வங்கிகளின் வைப்புத் திரட்டல் தொடர்ந்து அதிகரித்துச் சென்றன. தவணை சேமிப்பு வைப்புக்கள் மாத்திரம் 1978இல் ரூ. 15720 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 24, 830 இலட்சத்திஞல் அதிகரித்தன. உயர்ந்த அளவான வட்டி வீதங்கள் இருந்த போதிலும் கொடுகடனுக்கான கேள்வி உயர்வாகவே காணப்பட்டது. இலங்கை வங்கியின் வேளாண்மைப் பணி நிலையக் கிளைகளை மீளமைப்புச் செய்தமை வங்கித் தொழில் நடவடிக்கைகளின் பரவலில் வீழ்ச்சியினை ஏற்படுத்தியிருக்கக்கூடுமாயினும் வர்த்தக வங்கிக் கிளைகளின் விரிவாக்கம் 1979இல் அதிகரித்துக்கொண்டு சென்றதுடன் கொழும்பில் மூன்று புதிய வெளிநாட்டு வங்கிகளும் திறக்கப்பட்டன. மத்திய வங்கி, கொழும்பினை வெளிநாட்டு வங்கித் தொழிலின்மையமாக அபிவிருத்தி செய்யும் இறுதிநோக்கினை அடைவதற்கான ஒரு முத்றபடியாக வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம்' ஒன்றினை அறிமுகப்படுத்தியது. கடன் வழங்கலுக்கான வங்கி வீதம் தொடர்ந்தும் மாற்றமின்றியிருந்தது. ஆனுல் தண்ட வீதங்கள் 15 தொடக்கம் 25 சத வீதத்திற்கு உயர்த்தப்பட்டன. அதேவேளை வங்கி வீதத்தில் மத்திய வங்கியின் வழங்கலின் அளவும் உயர்த்தப்பட்டது. வங்கிகளுக்கிடையிலான அழைப்புக் கடன் வீதங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் நீங்கலாக வர்த்தக வங்கிகளின் வைப்பு, கடன் வழங்கல் வீதங்கள் மாற்றமின்றி நிலையாகவே இருந்தன. நடுத்தர நீண்டகால முதலீடுகளுக்கான மத்திய வங்கியின் மீள நிதியிடல் உயர்த்தப்பட்டு நியாயமாக்கப்பட்டது. ஏனைய தனியார் துறைகளுக்குச் சென்றடைய வேண்டிய கொடுகடன்களை கூட்டுத்தாபனங்கள் கவரா திருப்பதற்காக அவற்றின் மீது விதிக்கப்பட்ட கொடுகடன் உச்சவரம்பானது தாக்கமற்றதென நிரூபிக்கப்பட்டமையால் இத்தொழிற்பாடுகள் திறைசேரியிடம் ஒப்புவிக்கப்பட்டன.

பண நிரமபல்

முன்னைய ஆண்டில் கவனிக்கப்பட்ட மந்த நிலைமைக்கு மாருக நாணயக் விரிவாக்க வீதத்தில் காணப்பட்ட விரைவான அதிகரிப்பே 1979இன் நாணய அபிவிருத்திகளின் முக்கிய பண்பாகும். பொதுமக்களின் கையிலுள்ள நாணயங்களினதும் கேள்வி வைப்புக்களினதும் மொத்தத் தொகையை குறுகியதன்மையில் வரையறை செய்யப்பட்ட பண நிரம்பல் 1978இன் ரூ. 5700 இலட்சம் அல்லது 11 சதவீதம் கொண்ட அதிகரிப்புக்கெதிராக 1979இல் ரூ. 17,330 இலட்சம் அல்லது 29 சதவீதத்தால் அதிகரித்தது. இது 1977இல் நிலவிய பண விரிவின் அதேமட்டத்தினை 1979ஆம் ஆணடின் பண விரிவாக்க வீதம் மீண்டும் அடைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

1978,79ஆம் ஆண்டுகளின் நாணய வளர்ச்சி எதிர்மாறுன அபிவிருத்திகளைக் காட்டுகின்றன. 1978ஆம் ஆண்டு நாணய விரிவாக்க வீதம் சனவரியின் 35 சதவீதத்திலிருந்து ஒகத்தில 12 சதவீதமாக தொடர்ச்சியாக வீழ்ச்சி

## அட்டவணை 1.24

### பணநிரம்பலின் மாற்றம் 1977 — 1979

| கால முடிவில் | பணநிரம்பல் (ரூபா பத்து இலட்சங்களில்) | | | மாதாந்த மாற்றங்கள் (சதவீதம்) | | | ஆண்டு மாற்றம் (சதவீதம்) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1977 | 1978 | 1979 | 1977 | 1978 | 1979 | 1977 மேல் 1976 | 1978 மேல் 1977 | 1979 மேல் 1978 |
| சனவரி ... | 4203 | 5679 | 6091 | +0.9 | +5.8 | +2.6 | +34.4 | +35.1 | + 7.3 |
| பெப்புருவரி ... | 4429 | 5830 | 6489 | +5.4 | +2.7 | +6.5 | +37.9 | +31.6 | +11.3 |
| மாச்சு ... | 4710 | 6001 | 6752 | +6.3 | +2.9 | +4.0 | +38.9 | +27.4 | +12.5 |
| எப்பிறல் ... | 4764 | 6025 | 6727 | +1.2 | +0.4 | —0.4 | +35.5 | +26.4 | +11.7 |
| மே ... | 4808 | 5876 | 6694 | +0.9 | —2.5 | —0.5 | +34.2 | +22.2 | +13.9 |
| யூன் ... | 4947 | 5864 | 6692 | +2.9 | —0.2 | — ... | +32.7 | +18.5 | +14.1 |
| யூலை ... | 4893 | 5570 | 6667 | —1.1 | —5.0 | —0.4 | +33.5 | +13.8 | +19.7 |
| ஓகத்து ... | 4912 | 5523 | 6895 | +0.4 | —0.8 | +3.4 | +27.5 | +12.4 | +24.8 |
| செத்தெம்பர் ... | 5024 | 5804 | 7088 | +2.3 | +5.1 | +2.8 | +29.2 | +15.5 | +22.1 |
| ஒற்ரோபர் ... | 5062 | 5835 | 7159 | +0.7 | +0.5 | +1.0 | +26.9 | +15.3 | +22.7 |
| நவெம்பர் ... | 5254 | 5955 | 7233 | +3.8 | +2.1 | +1.0 | +30.7 | +13.3 | +21.5 |
| திசெம்பர் ... | 5366 | 5936 | 7669 | +2.1 | —0.3 | +6.0 | +28.8 | +10.6 | +29.2 |
| மாதாந்தச் சராசரி ... | 4864 | 5825 | 6846 | +2.1 | +0. | +2.2 | +32.5 | +20.2 | +17.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

யடைந்தது. அதைத்தொடர்ந்து செத்தெம்பரில் ஏற்பட்ட மிதமான அதிகரிப்பைத் தொடர்ந்து மீண்டும் குறைந்து சென்று திசெம்பரில் 11 சதவீதத்தை அடைந்தது. மறுபுறம் 1979இல் ஆண்டுப் பண விரிவாக்க வீதம் சனவரியின் 7 சதவீதத்திலிருந்து ஒகத்தில் 25 சதவீதத்துக்கு அதிகரித்து அதே மட்டத்திலேயே நிலைத்திருந்து, திசெம்பரில் 29 சதவீதமாக அதிகளவில் உயர்வடைந்தது. இந்த எதிர்மாறான நிலைகளைப் பிரதிபலிப்பதாக 1978 இல் 0.9 சதவீதமான மாதாந்த சராசரி அதிகரிப்பாகக் காணப்பட்ட பண நிரம்பல் 1979இல் 2.2 சதவீதமாக உயர்வடைந்தது. ஆனால் பண நிரம்பலின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பு சென்ற ஆண்டின் தொடர்பான மட்டங்களிலிருந்து மாதா மாதம் 1978இன் 20 சதவீதத்திலிருந்து 1979இல் 17 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.

1979ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்ட பணவிரிவு வீதத்தின் விரைவுக்கு தேறிய வெளிநாட்டு வங்கிச் சொத்துக்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பே முக்கிய காரணியாக அமைகிறது. வெளிநாட்டுத்துறை ரூ. 12,360 இலட்சம் கொண்ட அளவிற்குப் பண நிரம்பலின்மேல் விரிவுத்தாக்கத்தை உடையதாயிருந்தது 1978இல் பண நிரம்பல் மேல் குறிப்பிடத்தக்களவு சுருக்கத் தாக்கத்தை விளைவித்த அரச துறை தொழிற்பாடுகள் 1979 இல் ரூ. 4770 இலட்சம் கொண்ட நாணய விரிவிற்கு உதவின வங்கித் தொழில் துறையுடனான அரசின் அதிகரித்து எடுப்பனவுகளே இதற்கு முழுமையான காரணமாகும். மறுபுறத்தில் பண நிரம்பலில் மீது தனியார்துறைத் தொழிற்பாடுகளின் தேறிய தாக்கம் ரூ. 2220 இலட்சம் கொண்ட சுருக்கத் தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும் தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் (அரச கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு நிலையங்கள் உட்பட) ஏறக்குறைய ரூ. 26,000 இலட்சத்தால் அதிகரித்தது. இது பெருமளவில் இத்துறையின் தவணை சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட ரூ. 24,000 இலட்சம் கொண்ட அதிகரிப்பினால் பெருமளவில் அளவீடு செய்யப்பட்டது.

பொ ளாதாரத்தில் பணவீக்க அமுக்கங்கள் நிலவிய போதிலும் 1977 இன் வட்டிவீத சீர்திருத்தங்களின் விளைவாகத் தனியார்துறையின் தவணை சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட வளர்ச்சி, தொடர்ந்தும் நிறுவனத்துறையினூடே காணப்பட்ட அதிகரித்த சேமிப்புக்களின் உள்ளோட்டத்தை எடுத்துக்காட்டியது. இச் சாதகமான அபிவிருத்தி இல்லாதிருந்திருப்பின் இவ்வாண்டில் முழுமையான பணவிரிவு மிகவும் அதிகமாக இருந்திருக்கும். உண்மையில் இவ்வளவில் வைப்புக்களைத் திரட்டுவதில் வங்கித்தொழில் முறையின் ஆற்றல், பணவீக்க அமுக்கத்தின் தாக்கமின்றித் தனியார் துறையின் அதிகரித்த கொடுகடன் தேவைகளில் பெரும்பாலானவையை ஈடுசெய்ய உதவியது.

முந்திய ஆண்டைப்போலவே சில பருவகாலப் பண்பு நாணய வளர்ச்சித் தன்மையில் 1979 இலும் அவதானிக்கப்பட்டது. கூட்டுறவு நிலையங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ஆண்டின் முதல் அரைப் பகுதியில் அதிகரித்து பின்னர் குறிப்பாக ஒவ்வொரு ஆண்டின் நான்காவது காலாண்டுப் பகுதியில் கூடிய வீழ்ச்சிப் போக்கினைக் கொண்டிருக்கின்றமை ஒவ்வொரு ஆண்டிலும் காணக்கூடிய பொதுப்பண்பாகும். இவ்வமைப்புக்கேற்ப கூட்டுறவு நிலையங்களுக்கான கொடுகடன் 1979 இன் நான்காம் காலாண்டு பகுதியில் பெருமளவில் வீழ்ச்சியடைந்தது. பருவகாலத்தின் தன்மையினை வழமையாக எடுத்துக்காட்டாத வெளிநாட்டு வங்கிச் சொத்துக்களின் அசைவுகள் முதல் காலாண்டுப்

பகுதி நீங்கலாக 1979ஆம் ஆண்டு முழுவதிலும் பண நிரம்பல் மீது விரிவுத் தாக்கத்தையே கொண்டிருந்தன. அரச கூட்டுத்தாபனங்களின் நிதித் தொழிற் பாடுகள் ஆண்டின் முதல் நான்காம் காலாண்டுப் பகுதிகளில் விரிவுத்தன்மை மிக்கதாகவும் இரண்டாம், மூன்றும் காலண்டுகளில் சுருக்கத்தன்மை உள்ளன வாகவும் இருந்தன. ஏனைய தனியார்துறையின் தொழிற்பாடுகள் ஆண்டு முழுவதும் சிறப்பாக 1979ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் விரிவுத்தன்மை மிகத்தெளிவாக இருந்தது. அரசுசார் துறையின் தொழிற்பாடு கள் போன்று வங்கித் தொழில் முறையுடனுன அரசின் தொழிற்பாடுகள் 1979இன் நாணய வளர்ச்சித் தன்மையில் மேலுமொரு பருவகாலத் தன்மையை ஏற்படுத்தி ஆண்டின் முதலாம் நான்காம் காலாண்டில் விரிவுத்தாக்கத்தையும் மிகுதிப் பகுதியில் சுருக்கத் தாக்கத்தையும் ஏற்படுத்தின தனியார் துறைக்குள் இருந்த சில துணைத்துறைகளின் போக்கும் தேறிய வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களின் அசைவுகளும் தெளிவான பருவகாலத் தன்மையின் பண்பினை முழுவதாகத் தவிர்த்திருந்த போதிலும் 1979இன் நாணய வளர்ச்சியில் சில பருவகாலத் தன்மையை மீளவும் தோற்றுவிப்பதைக் குறிக்கின்றன.

மொத்தத்தில் ஒவ்வொரு ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் கூடிய அதிகரிப்பினைப் பதிவு செய்த பணநிரம்பலின் போக்கில் குறிப்பாக 1979இல் இத்தன்மையினைத் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. அதன் பின்னர் பண நிரம்பல் ஓகத்துவரை வீழ்ச்சியினைக் காட்டியதன் மூலம் சென்ற ஆண்டின் அதே வழிமுறையைப் பின்பற்றியது. 1979 ஓகத்து தொடக்கம் பணநிரம்பல் தொடர்ந்தும் அதிகரித்தது. 1978ஆம் ஆண்டைப் பொறுத்த வரையில் செத்தெம்பர் தொடக்கத்திலிருந்தே அதிகரிப்பிருந்தது. திசெம்பரில் முந்திய ஆண்டின் அதே மாதத்தின் சிறிதளவு வீழ்ச்சிக்கு எதிராக கூடிய அதிகரிப்பைப் பதிவு செய்ததன் மூலம் எதிர்மாறுன பட்டுணர்வு ஏற்பட்டது. 1979இன் பண நிரம்பல் வளர்ச்சி தேறிய வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களின் அதிகரிப்பினுல் ஏற்பட்டதாகும். இதன் பண்பு முன்பு கூறியதுபோல் பருவ கால தன்மை எதனையும் முழுமையாகத் தவிர்க்கின்றது. இவ்வாறு நாணய வளர்ச்சியில் தோன்றுகின்ற பருவகால தன்மை அரச துறையின் தொழிற் பாடுகளினுல் பெரிதும் உந்தப்பட்டதாகும்.

பண நிரம்பலின் உள்ளடக்கம் அதன் மாற்றத்திற்குப் பொறுப்பான அடிப் படைக் காரணிகளும் அட்டவணை 1.25 இல் காட்டப்பட்டுள்ளன. பண நிரம் பல் அதிகரிப்பு கேள்வி வைப்புக்களின் ரூ 9740 இலட்சத்தினுலான வளர்ச்சியா லும், பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயத்தின் ரூ. 7590 இலட்ச அதிகரிப்பினுலும் ஆக்கப்பட்டதாகும். பெருமளவிலான அதிகரிப்புடன் கேள்வி வைப்புக்கூறு 1978 ஆம் ஆண்டின் மொத்தப் பண நிரம்பலின் 49 2 சத வீதத்தி லிருந்து 1979 இறுதியில் 50.8 சத வீதத்திற்கு அதிகரித்தது.

தொடர்ந்தும் நான்காவது ஆண்டாக, வெளிநாட்டுத்துறை பண நிரம்ப லில் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தை ஏற்படுத்துவதில் செல்வாக்கினைக்கொண் டிருந்தது. 1977 இல் ரூ. 19,430 இலட்சம் 1978 இல் ரூ. 15,230 இலட்சம்கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்ததான தேறிய வெளிநாட்டு வங்கித் தொழில் சொத் துக்கள் செலாவணி வீத மாற்றங்களுக்காக சீராக்கம் செய்யப்பட்ட பின்னர் 1979 இல் ரூ. 12360 இலட்சத்தால் மேலும் அதிகரித்தன. அண்மைக் காலங் களில் அவதானிக்கப்பட்ட பொதுத் தன்மையைப் பின்பற்றி இவ்வதிகரிப்பின் பெரும் பங்கு மத்திய வங்கியின் பன்னுட்டு ஒதுக்கில் காணப்படுவதை உணர லாம். வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டு செலாவணி உடைமைகளும் இவ்வாண்டில் அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளன.

UNIVERSITY OF MORATUWA LIBRARY SRI LANKA

## அட்டவணை 1.25

### பண நிரம்பல் மாற்றங்களும் அமயக் காரணிகளும் 1977 — 1979

ரூ. பத்து இலட்சங்களில்

| விடயம் | 1976 இறுதியிலும் பார்க்க 1979 | 1977 இறுதியிலும் பார்க்க 1978 | 1978 இறுதியிலும் பார்க்க 1979 |
|---|---|---|---|
| 1. உள்ளீடு | | | |
| 1.1. கேள்வி வைப்பு .. | + 489 | + 347 | + 974 |
| 1.2 நாணயம் ... | + 711 | + 224 | + 759 |
| 2. பணநிரம்பலில் தேறிய மாற்றம் ... | + 1,200 | + 570 | + 1,733 |
| 3. பகுப்பு ... | + 1,943 | + 1,523 | + 1,236 |
| 3.1. வெளிப்புற வங்கித் தொழில் இருப்புச் சொத்துக்கள் (தேறிய)* ... | — 70 | + 688 | — 222 |
| 3.2. தனியார் துறை ... | | | |
| 3.2.1. வர்த்தகவங்கிக்கொடுகடன் அரசாங்கக்கூட்டுத்தாபனங்களுக்கு | + 614 | + 693 | + 984 |
| கூட்டுறவுகளுக்கு‡ ... | + 509 | + 205 | — 439 |
| ஏனைய தனியார் துறை ... | + 618 | + 1,890 | + 2,022 |
| 3.2.2. தவணை சேமிப்புவைப்புக்கள் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கு ... | — 294 | — 200 | — 951 |
| கூட்டுறவுகளுக்கு ... | — 45 | — 54 | — 76 |
| ஏனையதனியார் துறை ... | — 856 | — 1,351 | — 1,406 |
| 3.2.3. வர்த்தக வங்கிகளின் ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் (தேறிய) ... | — 617 | — 495 | — 358 |
| 3.3. அரச துறை ... | — 676 | — 1,520 | + 477 |
| 3.3.1. வர்த்தக வங்கிகொடுகடன் ... | + 132 | — 113 | + 63 |
| 3.3.2. மத்திய வங்கி கொடுகடன் ... | — 187 | + 38 | + 767 |
| 3.3.3. வங்கிவைப்புக்களும் பணநிலுவையும் ... | — 223 | — 1,050** | + 227 |
| 3.3.4. மத்திய வங்கியின் ஏனையசொத்துக்களும் பொறுப்புகளும் (தேறிய) ... | — 398 | — 394 | — 580 |
| 3.4. போக்குவரத்திலுள்ள விடயங்கள் .. | + 4 | — 121 | + 242 |


மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* பண நிரம்பலின் மேல்விளைவினை குறிக்கும், மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் கணக்குகளின் (தேறிய) மாற்றுப்பதிவுடன் ஒரு செலாவணி வீத மாற்றங்களுக்குரிய வெளிப்புற வங்கித் தொழில் மாறறங்கள் இப்பகுப்பாய்வில் இருந்து தவிர்க்கப்பட்டன. 1977,78,79 இல் உரிய மாற்றங்கள ரூ 16 550 இலட்சம், ரூ 3610 இலட்சம், ரூ 180 இலட்சம் ஆகும்.

‡ கூட்டுறவு நிலையங்களுக்கான கொடுகடன் முதிர்வுபெற்றபொருட் பற்றுச்சீட்டுக்களின் சலேத்தலுக்கு உட்பட்ட நெல் சந்தைப்படுத்தும் சபைத் தொங்கற் கணக்கில் பணங்களை கணக்கெடுப்பதற்கு சீராக்கம் செய்யப்பட்டது 1977,78,79 இல் மாற்றங்கள் முறையே ரூ. 590 இலட்சம், ரூ. 2380 இலட்சம், ரூ. 6720 இலட்சம் ஆகும். இச் சீரமைப்பைத் தொடர்ந்து 1977, 1978 இல் கூட்டுறவு நிறுவனங்களுக்கான வங்கிக் கொடுகடன் உரிய ஆண்டறிக்கையில மாற்றப்பட்டுள்ளதென அறிவிக்கபட்டுள்ளது.

** ரூ. 3900 இலட்சம் கொண்ட தொகை அரசாங்கத்தினுல் தேசிய அபிவிருத்தி வங்கிக்காக மத்திய வங்கிக்கு மாற்றப்பட்டமை உள்ளடக்கப்பட்டுள்ளது.

# பண நிரம்பல்




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மூலம் : இலங்கை மத்திய வங்கி.

பண நிரம்பல் என்பது, வர்த்தக வங்கிகள், அரசு நீங்கலாக பொது மக்களின் உடைமையான எல்லா நாணயங்களும் கேள்வி வைப்புக்களும் ஆகும்.

1979 இல் வர்த்தக நிலுவையும், சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கும் மோசமடைந்த போதிலும் மூலதனக் கணக்கில் கிடைத்த அதிகரித்த மூலவளங்களின் காரணமாக தேறிய வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் குறிப்பிடத் தக்களவு அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளன.

தனியார் துறையின் தொழிற்பாடுகள் முந்திய ஆண்டின் பண நிரம்பல்மீது ரூ. 6880 இலட்சம் கொண்ட குறிப்பிடத்தக்களவு விரிவுத் தன்மையை ஏற்படுத்தியமைக்கு மாறாக 1979 இல் ரூ. 2220 இலட்சம் கொண்ட சுருக்கத்தன்மையை விளைவித்தன. தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடன் (அதாவது அரச, அரச கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு நிலையங்கள் தவிர்ந்த ஏனைய சகலதும் 'ஏனைய தனியார் துறை' என விவரிக்கப்பட்டுள்ள) முந்திய ஆண்டின் ரூ.18900 இலட்ச அதிகரிப்பிற்கு எதிராக ரூ.20220 இலட்சத்தால் அதிகரித்துள்ளது. வர்த்தக வங்கிகளிலிருந்து அரச கூட்டுத்தாபனங்களின் கடன்பாடுகள் ரூ.9840 இலட்சத்தால் அதிகரித்திருக்கையில் கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் ரூ. 4080 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.


முந்திய ஆண்டில் பண நிரம்பலின் மேல் விரிவுத்தன்மைத் தாக்கத்தை உண்டுபண்ணிய "ஏனைய தனியார்துறை" தொழிற்பாடுகள் 1979 இல் தொடர்ந்தும் விரிவுத்தன்மையுடையதாய் இருந்தன. இத் துறைக்கான வங்கிக் கொடுகடன் ரூ. 20220 இலட்சத்தால் மிக அதிகரித்து பொருளாதார செயற்பாட்டில் இத்துறையின் விரிவான பங்கினையும் கொடுக்கல் வாங்கல்கள் நிதியீட்டப்பட்ட உயர்ந்த விலைகளையும் பிரதிபலித்தது. எவ்வாறயினும் வங்கித் தொழில் முறையுடனான அவற்றின் தவணை சேமிப்பு வைப்புகளும், ரூ. 14060 இலட்சம் கொண்டதொரு அதிகரிப்பு ஏற்பட்டதன் காரணமாக இத்துறையின் விரித்வுத்தாக்கம் ரூ. 6160 இலட்சத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது.

1979 இல் அரச கூட்டுத்தாபனக்களிற்குரிய வங்கிக் கொடுகடன் ரூ. 9840 இலட்சத்திற்கு அதிகரித்தது. இது ஆண்டின் முதல் அரைப்பகுதியில் ரூ. 11240 இலட்சம் கொண்ட கடன்பாடுகளில் உயர்ந்து இரண்டாவது அரை ஆண்டில் ரூ. 1400 இலட்சம் குறைவினால் ஓரளவு ஈடு செய்யப்பட்டது. இவ் அதிகரித்த கடன்பாடுகளுக்கு அதிகளவான நடவடிக்கைகள் குறிப்பாக இறக்குமதிகளின் அதிகரித்த தன்மையே காரணமாகும். ஆனால் பொருத்தமற்ற விலையீடல் கொள்கைகள் நிதி ஒழுங்குமுறை இன்மை, பொருட் பட்டியலில் நியாயமானளவு கட்டுப்பாட்டைப் பயன்படுத்தத் தவறியமை, போன்ற காரணங்களினால் கடன் பெறுகையில் அதிகளவான நாட்டம் இருந்தமைக்கு சான்று உண்டு, மறுபுறத்தில் சில வர்த்தக வங்கிகள் அரச கூட்டுத்தாபனங்களுக்கு நிதியீட்டுவதில் அவற்றின் நிதி நிலைமையைக் கருதாது அதி சிறப்பான முன்னுரிமை காட்டுவதாகத் தென்பட்டது. எனினும் இத்துறையின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் ரூ. 9510 இலட்சத்தால் அதிகரித்தமை காரணமாக இத்துறை தொழிற்பாடுகள் விரிவுத்தாக்கம் ரூ. 330 இலட்சத்திற்கு குறைக்கப்பட்டது. இம் முதன்மை நிலையான வைப்பு வளர்ச்சி தேசிய அபிவிருத்தி வங்கியினால் வங்கித் தொழில் துறையுடன் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்களவு வைப்புக்களினால் ஏற்பட்டது.

கூட்டுறவு நிறுவனகளுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் 1979 இல் ரூ. 4390 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தது. இது 1978 இன் ரூ. 2050 இலட்சம் 1977 இன் ரூ 5090 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கது.

## பண நிரம்பலின் மூலங்கள்

***1967 – 74ஆண்டு இறுதி எண்தொகைகள், 1975 தொடக்கம் மாத இறுதி எண்தொகைகள்***




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம். மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இக்கோட்டுப்படம் இலங்கையிலுள்ள பண நிரம்பலின் மூலத்தைக் காட்டுகின்றது.

(அ) "அரச நிதி" ...அரசின் ரூபா பண உடமைகள் நீங்கலாக, அரசின் மீதான வங்கித் தொழில் முறைக்கு உரியனவற்றைக் காட்டுகின்றது.

(ஆ) ''பொதுமக்களுக்குக் கொடுகடன்'' ...தனியார்துறை மீது தவணை, சேமிப்பு வைப்புக்கள் நீங்கலாக வங்கித் தொழில்முறைக்கு உரியனவற்றைக் காட்டுகின்றது.

தேறிய வெளிநாட்டு வங்கிச் சொத்துக்கள் எதிர்க் கணியமாக இருக்கும் வேளைகளில், மொத்தப் பண நிரம்பற் கோடு அரச நிதியை வரையறுக்கும் கோட்டிற்குக் கீழும் அரசின் வழங்குகை எதிர்க் கணியமாக இருக்கும் வேளையில் மொத்தப் பண நிரம்பற் கோடு பொதுமக்கட்கு கொடுகடன் வழங்குதலை வரையறுக்கும் கோட்டிற்குக் கீழும் காணப்படும்.

1977 சனவரி முதல் பன்னாட்டு ஒதுக்கு மீளப் பெறுமதியிடல் கணக்கில், எதிர்ப் பதிவுகளுடன் அமைந்த செலாவணி வீத மாற்றத்தினால் ஏற்படும் வெளிநாட்டு வங்கிச் சொத்துக்கள் தவிர்க்கப் பட்டுள்ளன.

இவ் வீழ்ச்சி முக்கியமாக உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் நெற் கொள்வனவுக்காக செய்யப்பட்ட முற்பணங்களில் பிரதிபலித்தது. இது ரூ. 3870 இலட்சம் வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. அதேவேளை பயிர்ச்செய்கைக்கும் சந்தைப்படுத்துதல் நோக்கங்களுக்குமான முற்பணங்கள் முறையே ரூ. 750 இலட்சம், ரூ. 170 இலட்சம் தொகைகளினால் வீழ்ச்சியடைந்துள்ளது. எனினும் ஏனைய நோக்கங்களுக்கான கொடுகடன் ரூ 400 இலட்சம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பைக் காட்டியது. இது இத் துறைக்குரிய கொடுகடன் மொத்தத் தொகையில் குறைப்பை ஏற்படுத்தியது. இத்துறையில் 1979 இல் கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடனில் ஏற்பட்ட கூடிய வீழ்ச்சி இவ்வாண்டில் வேளாண்மைத் துறையில் கொடுகடனின் கிடைப்பனவு குறிப்பிடத்தக்களவு பின்னடைவு நிலையில் இருந்தமையைக் காட்டுகின்றது.

1977/78 ஆண்டுகளில் தொழிற்பாடுகள் குறிப்பிடத்தக்களவு நிதிச் சுருக்கத் தன்மையை ஏற்படுத்தியதற்கு மாறாக 1977 இல் வங்கித்தொழில் முறையுடனான அரசதுறை தொழிற்பாடுகள் ரூ. 10,570 இலட்சம் கொண்ட குறிப்பிடத்தக்க விரிவுத் தாக்கத்தை விளைவித்தன. இது அரசிற்கான வங்கிக்கொடுகடனில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பினதும் வங்கித்தொழில் முறையுடனான அரசின் வைப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியினதும் கூட்டு விளைவாகும். அரசாங்கத்திற்குரிய வர்த்தக வங்கிக் கொடுகடன் ரூ. 630 இலட்சத்தால் அதிகரிக்கையில் மத்திய வங்கியிடமிருந்தான கொடுகடன் ரூ. 7670 இலட்சம் கொண்ட உச்ச வரம்பு நிலையை அடைந்து அரசாங்கத்துக்குரிய வங்கிக் கொடுகடனில் ரூ. 8300 இலட்சம் கொண்ட தேறிய அதிகரிப்பை விளைவித்தது. இத்துடன் வங்கித் தொழில் முறையுடனான அரசாங்க வைப்புக்கள் ரூ. 2270 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன. எனினும் இவ்வாண்டில் மத்திய வங்கியின் ஏனைய சொத்துக்கள் பொறுப்புக்கள் (தேறிய) ரூ. 5800 இலட்சத்தால் அதிகரித்ததன் மூலம் இக் கொடுக்கல் வாங்கல்களிருந்து எழும் பணவிரிவு ரூ. 4770 இலட்சத்திற்கு குறைக்கப்பட்டது. பின் கூறப்பட்டது முக்கியமாக மத்திய வங்கியின் மிகையையும் பன்னாட்டு நாணய நிதியினாலான சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கொன்றினையும் உள்ளடக்குகின்றது.

வர்த்தக வங்கித் தொழில்

கடந்த சில ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட அபிவிருத்திகளுக்கு இணங்க வர்த்தக வங்கிகளின் மூலவளங்கள் 1979 இல் கூடிய அதிகரிப்பை பதிவு செய்துள்ளன. இவ் ஆண்டில் மொத்த மூலவளங்கள் அதிகரிப்பு ரூ. 48170 இலட்சம் அல்லது 35 சதவீதமாகும். இது முன்னைய ஆண்டின் அதே அளவினை ஒத்ததாகும். பொறுப்புக்களில் அனைத்து முக்கிய வகைகளின் மாற்றங்கள் வர்த்தக வங்கிகளின் மூலவள அடித்தளத்தை விரிவாக்க உதவின. எனினும் அண்மை ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட தன்மையினைப் பின்பற்றி வைப்புக்களின் வளர்ச்சி மூலவளத்தைக் கட்டியெழுப்புவதற்கு முக்கிய தூண்டுதலை ஏற்படுத்தியதோடு ஆண்டில் மூலவள மொத்த அதிகரிப்பில் 72 சதவீதத்திற்கு வகைகூறியது. கேள்வி தவணை ஆகிய இரு வைப்புக்களும் பெருமளவு அதிகரிப்புக்களைப் பதிவுசெய்துள்ளன. ஆனால் தவணை, சேமிப்பு வைப்புக்களில் ரூ. 24830 இலட்சம் கொண்ட வளர்ச்சி மிகவும் அதிகளவான பங்கிற்கு வகைகூறியது. சென்ற ஆண்டினைப் போலவே இது 1977 இன் வட்டிவீத சீர்திருத்தத்தின் தாக்கத்தைப் பிரதிபலித்தது. அதிகரித்த வைப்புக்களின் மூலம் ஏற்பட்ட மூலவள சேர்ப்பு செலுத்தப்பட்ட மூலதனம்,

ஒதுக்கு நிதிகள், பங்கிடப்படா இலாபங்கள் வெளிநாட்டுக் கடன்பாடுகள் ஏனைய பொறுப்புக்கள் என்பனவற்றின் அதிகரிப்பினுல் மேலும் அதிகரித்தன. எனினும் உள்ளூர் வங்கிகளிடையேயான கடன்பாடுகள் இவ்வாண்டில் ரூ. 5520 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தன.

மூலவளங்களின் குறிப்பிடத்தக்களவு சேர்த்தலுக்கு எதிராக தனியார் துறையினரின் கொடுகடன் கேள்வி தொடர்ந்தும் உயர்வாகவே இருந்தது. அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் உட்பட தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் 1979 இல் ரூ. 25,670 இலட்சத்தினுல் அதிகரித்தது. கேள்வி வைப்புக்கான திரவச் சொத்து விகிதம் 1978 இல் 85 சத வீதத்திலிருந்து 1979 இல் 88 சத வீதத்திற்கு சிறிதளவு உயர்ந்து வர்த்தக வங்கிகளின் திரவ நிலைமையில் சில முன்னேற்றத்தைக் காட்டியது. மேலும் 1978 இறுதியில் ரூ. 2,550 இலட்சத்தில் இருந்த வங்கி வீதத்திலும் தண்டனை வீதத்திலுமான மத்திய வங்கியிடமிருந்து பெற்ற வர்த்தக வங்கிகளின் கடன்பாடுகள் 1979 இறுதியில் ரூ. 1,950 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைத்தன. மறுபுறத்தில், மொத்த சொத்துக்களுக்கான திரவச்சொத்து விகிதம் 1978 இன் 37 சத வீதத்திலிருந்து 1979 இல் 34 சத வீதமாக வீழ்ச்சியுற்றது. இம்மாற்றங்கள் யாவற்றையும் ஒன்ருக நோக்கும்போது 1979 இறுதியில் வங்கித் தொழில் முறையின் திரவ நிலைமை முந்திய ஆண்டின் இறுதியில் நிலவிய நிலைமையிலும் குறிப்பிடத்தக்களவு வேறுபாடுடையதல்லதெனத் தோன்றுகிறது.

வங்கித் தொழில் முறையினுல் திரட்டப்பட்ட அதிகரித்த மூலவளங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் தனியார் துறைக்கான கொடுகடன் வழங்குதற்கும், வங்கிகளுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்களுக்கு நிதியீட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டன. அரச கூட்டுத்தாபனங்களுக்குரிய வர்த்தக வங்கி முற்பணங்கள், ரூ. 9,840 இலட்சத்தால் அதிகரித்த வேளையில், வங்கித் தொழில் முறையுடனுன இத்துறையின் வைப்புக்களில் ரூ. 12,860 இலட்சம் கொண்ட அதிகரிப்பு காணப்பட்டமை இத்துறையிலிருந்து வங்கி மூலவளங்களின் தேறிய உட்பாய்ச்சலுக்கு வழிவகுத்தது. பிற்கூறப்பட்டதற்கு வங்கித்தொழில் முறையுடன் தேசிய அபிவிருத்தி வங்கியினுலும், தேசிய சேமிப்பு வங்கியினுலும் செய்யப்பட்ட வைப்புக்களே பெருமளவில் காரணமாகும். கூட்டுறவுகளுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ரூ 4,390 இலட்சத்தால் வீழ்ச்சி அடைந்தன. ஆனுல் வர்த்தக வங்கிகளுடனுன இத்துறையின் வைப்புக்கள் ரூ. 1,510 இலட்சத்தால் அதிகரித்து, இத்துறையிலிருந்து ரூ. 5900 இலட்சம் கொண்ட மூலவள உட்பாய்ச்சலுக்கு வழிவகுத்தது. மறுபுறத்தில் தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளின் கொடுப்பனவு ரூ. 20,220 இலட்சத்தால் அதிகரித்திருந்தது. ஆனுல் வங்கித்தொழில் முறையுடனுன தனியார் துறைகளின் வைப்புக்களில் ரூ. 19,620 இலட்சத்தால் ஏற்பட்ட ஒரு அதிகரிப்பினுல், இத்துறைக்கான மூலவளங்களின் தேறிய வெளிப்பாய்ச்சல் ரூ. 600 இலட்சத்திற்குக் குறைக்கப்பட்டது. தனியார்துறையை முழுமையாக நோக்கின் (அதாவது அரச கூட்டுத்தாபனம் கூட்டுறவு நிறுவனங்கள் உட்பட) இத்துறைக்கான வங்கி முற்பணங்கள் ரூ. 25,670 இலட்சத்தினுல் அதிகரித்தபோதும் வங்கித்தொழில் முறையுடனுன இத்துறையின் மொத்த வைப்புக்களில் ரூ. 33,990 இலட்சம் அதிகரிப்பின் காரணமாக இத்துறையில் இருந்து வர்த்தக வங்கிகளுக்கு ரூ. 8,320 இலட்சம் கொண்டதொரு தேறிய மூலவள உட்பாய்ச்சல் ஏற்பட்டது. இவ்வாண்டில் வங்கித்தொழில் முறையிடையே மூலவளங்களின் பயன்பாடு ரூ. 8,280 இலட்சமாகும். இதற்கு அவற்றின் நிலையான, மற்றும் ஏனைய சொத்துக்களில் ரூ. 7,490

இலட்சம் கொண்ட அதிகரிப்பின் விளைவே பெரிதும் காரணமாகும். எனினும் வங்கிகளுக்கிடையேயான தேறிய கொடுக்கல் வாங்கல்கள் ரூ. 250 இலட்சத்தினால் அதிகரித்து இருக்கையில், வங்கியின் கைப்பணம் ரூ. 540 இலட்சத்தினால் அதிகரித்திருந்தது. அட்டவணை 1.26 வர்த்தக வங்கிகளின் மூலவளங்களின் மாற்றங்களையும் தேறிய அடிப்படையில் அவற்றின் பயன்பாட்டையும் சுருக்கமாகக் காட்டுகின்றது.

அட்டவணை 1.26

**வர்த்தக வங்கிகளின் மூலவளங்களிலும் அவற்றின் பயன்பாட்டிலும் ஏற்பட்ட மாற்றங்கள்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| துறைகள் | 1976 இறுதி/ 1977 இறுதி | 1977 இறுதி/ 1978 இறுதி | 1978 இறுதி/ 1979 இறுதி |
|---|---|---|---|
| 1. அரசு ... | 25.6 | 220.8 | 15.6 |
| 2. மத்திய வங்கி ... | 197.6 | 126.1 | —872.2 |
| 3. அரச கூட்டுத்தாபனங்கள் ... | —197,3 | —282.0 | 302.6 |
| 4. கூட்டுறவு நிறுவனங்கள் ... | —416.0 | —213.8 | 589.8 |
| 5. ஏனைய தனியார் துறை ... | 546.1 | —350.5 | — 66.2 |
| 6. வங்கியிடையிலானவை ... | 482.1 | 484.3 | 276.2 |
| 7. வெளிநாட்டுத்துறை ... | —637.7 | 15.0 | +252.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கூட்டுறவு நிலையங்களுக்கான கொடுகடன் முதிர்வுபெற்ற பொருட் பற்றுச்சீட்டுகளின் கலைத்தலுக்கு உட்பட்டு நெல் சந்தைப்படுத்தும் சபைத் தொங்கற் கணக்கில் பணங்களை கணக்கெடுப்பதற்குச் சேர்க்கப்பட்டது. 1977, 1978, 1979இல் மாற்றங்கள் முறையே + ரூபா. 589 இலட்சம், + 2,380 இலட்சம், + ரூ. 6,724 இலட்சம் ஆகும்.

**வங்கிக்கிளை விரிவாக்கம்**

அலுவல்சார் புள்ளிவிபரம் 1979 இல் வர்த்தக வங்கிக் கிளைகளின் விரிவாக்கத்தில் வளர்ச்சி இருந்ததைக் காட்டுகிறது. 1979 இல் வர்த்தக வங்கிக்கிளைகளின் மொத்த எண்ணிக்கை முந்திய ஆண்டின் 22 கிளைகளின் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 73 கிளைகளால் வளர்ச்சியடைந்துள்ளது. இது இலங்கை வங்கியினால் திறக்கப்பட்ட 44 புதிய கிளைகளையும், மக்கள் வங்கியின் 25 கிளைகளையும் அட்டன் நாசனல் வங்கியின் ஒரு கிளையையும், இவ் ஆண்டு செயற்படத் தொடங்கிய 3 புதிய வெளிநாட்டு வங்கிகளையும் கொண்டுள்ளது. ஆனால் பாதுகாப்பு, பொருளாதாரக் காரணங்களுக்காக இலங்கை வங்கி அதன் 390 வேளாண்மை பணி நிலைய கிளைகளில் 240 ஐ ''இடமாற்றியது'' இது இக்கிளைகளை, அண்மித்த முழு உரிமையுள்ள கிளைகளின் விரிவாக்க அலுவலகம் ஒன்றாக தரம் குறைப்பதற்கு ஒத்ததாகும். முன்னைய வே. ப. நி. கிளைகளும் குறைந்தபட்ச தேவையையே அளித்தன. ஆனால் அண்மைக்கால மாற்றத்தின் காரணமாக இவை வங்கிக்கிளைகளாக கருதப்படலாமா என்பது ஐயத்திற்குரியதே. இக்காரணியினைக் கருத்திற்கொள்ளின் வங்கிக்கிளைகளின் எண்ணிக்கை 1979 இல் வீழ்ச்சியடைந்ததாகவே கருதப்படல்வேண்டும்.

1979 இல் வர்த்தக வங்கித் தொழிலின் குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில் இலங்கையில் செயற்பட புதிய வெளிநாட்டு வங்கிகளை அனுமதிப்பதில்லை என்று இதுவரை பின்பற்றப்பட்ட கொள்கைகளில் இருந்து விலகியதே ஆகும். அதிக அளவிலான வெளிநாட்டு முதலீட்டை வரவேற்பது என்னும் அரசின் நோக்

கத்தை செயல்படுத்துவதற்குச் சிறந்த தரமான வெளிநாட்டு வங்கிகள் நாட்டில் கிளைகளைத் திறப்பதற்கு அனுமதிப்பது அவசியமாயிற்று. இதற்கிணங்க புதிய மூன்று வெளிநாட்டு வங்கிகள் கிளைகளைத் திறந்தன அவையாவன: பாங் டி எல் இன்டோ சைனு எற். டி- சுவெஸ் (இந்தோசுயெஸ்வங்கி) பாங் ஒப் கிறெடிற் அன்ட் கொமேர்ஸ் இன்டர் நாஷனல் (ஓவர்சீஸ்) (வரையறுக்கப்பட்டது) சிற்றி பாங் என். ஏ. என்பனவாகும். இவற்றுடன் இலங்கையில் தற்போது செயல் படும் வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 14 ஆக உயர்ந்தது,

1979இல் இலங்கை வங்கித் தொழில் அபிவிருத்தியில் ஏற்பட்ட மற்றைய பண்பு யாதெனில் இலங்கையின் வெளிநாட்டு நாணய வங்கித் தொழிலில் உறுதுணைநிறுவுவதற்கு இயலக்கூடிய வகையில் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் திட்டத்தினைச் செயற்படுத்தியதாகும் இவ்வங்கித் தொழிற் கூறுகட்கு பதிவற்றோர் பதிவுள்ளோர் கொ. பெ. பொ ஆணைக்குழு முயற்சிகள் ஆகியவற்றுடன் வெளிநாட்டுநாணயத்தில் மட்டுமே கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்குஇசையளிக்கப்பட்டது. இலங்கையில் கடல்கடந்த வங்கித்தொழில் மத்திய நிலையத்தில் அபிவிருத்தியில் இதுஒரு முன்னோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆண்டின் இறுதியில் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் கூறுகளாகச் செயல் படுவதற்கு மத்திய வங்கியால் 11 வர்த்தக வங்கிகளுக்கு பரப்புதல் வழங்கப் பட்டது. தொடக்கத்தில் அவற்றிற்கு ஐ. அ. டொலரிலும் பவுண் இஸ்டேர் லிங்கிலும் கொடுக்கல் வாங்கல் செய்ய இசைவளிக்கப்பட்டன. பின்னர் இது 10 முதன்மை பன்னாட்டு நாணயங்களை உள்ளடக்கும் வகையில் விரிவாக்கப்பட்டது. இக் கூறுகள் வதிவற்றோர்களுக்கும் கொ. பெ. பொ. ஆணைக் குழுவின் தொழில் முயற்சிகளுடமிருந்து வெளிநாட்டு நாணயத்தின் கடன்கள் வழங்கவும் அவற்றிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்ளவும் இசைவளிக்கப்பட்டன. 1979 இன் இறுதியில் இக் கூறுகளின் மொத்த சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐ. அ. டொலர்கள் 390 இலட்சங்களுக்கு (ரூ. 6020 இலட்சம்) ஆக இருந்தது.


இவ் ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கி 9 கிளைகளை திறந்தது. அதனுல் அதன் கிளைகளின் மொத்த எண்ணிக்கை ஆண்டின் இறுதியில் 36 ஆக உயர்ந்தன.

### வட்டி வீதங்கள்

சில மாற்றங்களை தவிர, இவ்வாண்டில் வட்டி வீதங்களின் அளவிலும் அமைப்பிலும் முக்கிய மாற்றங்கள் எதுவும் இருக்கவில்லை. அரச பிணைகள் 10, 12 ஆண்டுகள்) வீதமும் திறைசேரி உண்டியல் வீதமும் முறையே 10, 9 சத வீதத்தில் மாற்றம் உறுது இருந்த வர்த்தக வங்கிகள், தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் சேமிப்புதவணை வைப்புக்களின்மீது வழங்கப்பட்ட வட்டிவீதங்களில் மாற்றம் எதுவும் இருக்கவில்லை எனினும் அண்மையில் நிறுவப்பட்ட வெளி நாட்டு வங்கி ஒன்றுரூ. 5000 இற்கும் அதற்கும் மேற்பட்ட சேமிப்பு வைப்புக்களுக்கு 9 சதவீதஊக்கமளிக்கும் வீதத்தை அளித்தது. வர்த்தக வங்கிகளின். கடன் கொடுக்கும் வீதங்கள் அளிக்கப்பட்ட பிணைவகைகளுக்கு ஏற்ப 10, 21 சத வீதத்திற்கு இடையே சென்ற ஆண்டின் இறுதியில் இருந்த அதே நிலையில் மாற்றமுறுது இருந்தது.

## பண வீதங்கள்

காலாண்டு இறுதி எண்தொகைகள்




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம். மூலம்: இலங்கை மத்திய வங்கி.

சென்ற ஆண்டினைப் போலவே வங்கி வீதம் 10 சதவீதத்திலிருந்தது. எனினும் செத்தெம்பர் 4 ஆம் நாள் முதல் வர்த்தக வங்கிகள் மிகையான மத்திய வங்கி கொடுகடனை நாடுவதைக் குறைக்கு முகமாக 15 இற்கும் 25 சதவீதத்திற்கும் இடையே படிப்படியாக அதிகரிக்கும் தண்டனை வீத அளவு புகுத்தப்பட்டது.

அதிகரித்த தண்டனை வீதம் வர்த்தக வங்கிகளின் வைப்பு கடன் அளிக்கும் வீதங்களை நேரடியாக தாக்கவில்லை. ஆனால் வங்கிகளுக்கிடையேயான அழைப் புக்கடன் வீதத்தை முந்திய 7, 9½ சதவீத மட்டத்திலிருந்து 10. 13½ இடை யேயான சதவீதமட்டத்திற்குக் கூட்டியது. பெரிய வங்கிகள் உயர்ந்த தண் டனை வீதங்கள் இருக்கின்ற நிலையிலும் அதிகளவிலான எடுப்பனவுகளை மேற் கொள்வதனை நோக்கின் அவை தற்போதைய வட்டிச் செலவினத்தை ஒரு பொருட்டாகக் கருதவில்லை என்பதனையே எடுத்துக்காட்டுவதாக உள்ளது தேசிய வீடமைப்பு திணைக்களத்தின் கடன் வழங்கும் வீதங்கள் மாற்றமுறாது இருக்கையில் அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனத்தின் வீதங்கள் செத்தெம்பரில் 1 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளன. தேசிய சேமிப்பு, முதலீட்டு வங்கி யின் ஆகக்கூடிய கடன் வழங்கும் வீதம் 1979 செத்தெம்பரிலிருந்து 4 சத வீதத்தால் உயர்ந்தது ஒக்டோபர் 1ம் நாள் செயற்படத் தொடங்கிய தேசிய அபிவிருத்தி வங்கி அரசாங்க கொள்கைகளுக்கு ஏற்ப அதன் மீள நிதியீட்டு கடன்களின் மேல் 10-12 சதவீதத்தை அறவிட்டது; மத்திய வங்கியின் நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியத்திலிருந்தான மீள நிதியீட்டுக் கடன் களின் 3 பரந்த வகுப்புக்களாக மீள வகுக்கப்பட்டதுடன் 1979 ஒகத்து 1ஆம் நாள் தொடக்கம் வட்டி வீதங்கள் திருத்தி அமைக்கப்பட்டது. இத் திகதி வேளாண்மை கைத்தொழில் அபிவிருத்திக்கான கடன்களின் மேல் 6½ சதவீதம் அறவிடுகையில் வர்த்தகம் வணிகம் அல்லது வியாபாரம் ஆகியவற்றின் அபி விருத்திக் கடன்களின்மீது 7½ சதவீதம் அறவிடப்பட்டது. திருத்தி அமைக் கப்பட்ட பின்னர் வேளாண்மை அமைச்சுக்களால் தொழிலுக்காக ஒப்புத லளிக்கப்பட்ட மீளநிதியீட்டுக் கடன்களுக்கு 6½ சதவீதமும் வரிச்சலுகை பெறும் அங்கீகரிக்கப்பட்ட முதலீடுகளுக்கும் அமைச்சுக்களால் ஒப்புதலளிக்கப் படாத வேளாண்மை, கடற்றொழில் என்பவற்றுக்கான கடன்களுக்கு 9 சத வீதமும் ஏனைய உற்பத்திக் கடன்களுக்கு 11 சதவீதமும் அறவிடப்பட்டன,

### மத்திய வங்கித் தொழில்

மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள் / பொறுப்புக்கள் முந்திய ஆண்டின் ரூ. 27110 இலட்சம் அல்லது 23 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகை யில் 1979 இல் ரூ. 25960 இலட்சத்தினால் அல்லது 18 சதவீதத்தால் அதிக ரித்தது. முந்திய இரு ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட தன்மையினைத் தொடர்ந்து ரூ. 18280 இலட்சத்தினால் வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக் கள் அதிகரித்தன பன்னாட்டு நாணய நிதியத்துடனான தேறிய பெறுகைகள் ரூ 19000 இலட்சமாக இருந்த வேளையில் வர்த்தக வங்கிகளிடமிருந்தான கொள்வனவுகள் ரூ. 35630 இலட்சத்தை அளித்தன. வெளிநாட்டு முதலீட்டின் மேல் பெற்றவட்டி ரூ. 5880 இலட்சம் ஆகும், அதே வேளையில் பணயீட்டு ஒதுக்கில் இருந்தான கொடுப்பனவுகள் அரச, அரச முகவர்களின் சில இறக்குமதிகளை ஒட்டி ரூ. 33190 இலட்சமாகவும் அரசாங்க வெளிநாட்டுக் கடன்களின் தீர்ப்பனவு ரூ 10,150 இலட்சமாகவும் அமைந்தன.

இவ்வாண்டில் மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் ரூ. 7680 இலட்சத்தால் அதிகரித்துள்ளன. முந்திய ஆண்டில் ரூ. 380 இலட்சம் கொண்ட சிறு அதிகரிப்பை பதிவு செய்த அரசிற்குரிய கொடுகடன் 1979 இல் ரூ. 7680 இலட்சத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. அரச, அரச உத்தரவாத பிணைகளில் அமைந்த வங்கியின் உடைமைகள் ரூ. 5860 இலட்சத்தால் அதிகரித்து இருக்கையில் தற்காலிக முற்பணங்கள் ரூ. 1810 இலட்சத்தால் அதிகரித்து இருந்தன. மறுபக்கத்தில் ஏனைய வற்றிற்கான கடன்களும் முற்பணங்களும் ரூ. 4280 இலட்சத்தால் குறைந்துள்ளன. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கியின் கொடுப்பனவு ரூ. 600 இலட்சத்தால் குறைந்தமையேயாகும். மத்திய வங்கி ரூ. 260 இலட்சத்தை தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் என்பவற்றின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்தது ஆசிய தீர்ப்பனவு (ஆ. தீ. ஒ.) ஒன்றியத்தின் கணக்கில் ரூ. 6490 இலட்சம் கொண்ட கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டதன் விளைவாக மத்திய வங்கியின் ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் ரூ. 4020 இலட்சத்தால் அதிகரித்தன.

பொறுப்புக்கள் பக்கத்தில் மத்திய வங்கியின் உள்நாட்டு பொறுப்புக்கள் 1979 இல் ரூ. 17220 இலட்சத்தால் அதிகரித்துள்ளன. இவற்றுள் நாணய வழங்கல் முந்திய ஆண்டின் ரூ. 2890 இலட்சம் அல்லது 9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 8120 இலட்சம் அல்லது 23 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. பன்னாட்டு நிருவனங்கள் உடனனவை தவிர்ந்த வைப்புப் பொறுப்புக்கள் ரூ. 1140 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தன. இதற்கு அரசு வைப்புக்களில் முந்திய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 9440 இலட்ச அதிகரிப்புக்கு எதிர்மாறாக ரூ. 3050 இலட்சம் வீழ்ச்சியே பெரிதும் காரணமாகும். அரசாங்கத்தின் வைப்புக்களின் குறைவு கொடுகடனின் அதிகரிப்புடன் சேர்ந்து 1979 இல் அரசினால் பயன்படுத்தப்பட்ட மத்திய வங்கி மூலவளங்களின் அளவினை பிரதிபலிக்கின்றது. மத்திய வங்கி முதலீட்டு கொடுகடன்களுக்கான அதிகரித்த கேள்விகளை ஈடுசெய்யும் முகமாக ரூ. 1500 இலட்சத்தை நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியத்திற்கு வழங்கியது. மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் 1979இல் ரூ. 8470 இலட்சத்தால் அதிகரித்தன. இது முக்கியமாக ஆ.தீ.ஒ. இடைப்போக்கிலுள்ள விடயங்களையும் மத்திய வங்கியின் மிகையினையும் சி. எ. உ. ஒதுக்கினையும் கொண்டுள்ளது.

1978இன் ரூ. 850 இலட்சம் கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக வெளிநாட்டுப் பொறுப்புக்கள் 1979 இன் ரூ. 8740 இலட்சத்தால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. இவ்வாண்டில், வெளிநாட்டில் மத்திய வங்கியின் கடன்பாடுகள் ரூ 860 இலட்சத்தினால் வீழ்ச்சி அடைந்ததினால், இவ்வதிகரிப்பு வெளிநாட்டு நிறுவனங்களின் வைப்புக்களில் ரூ. 9600 இலட்சம் கொண்ட அதிகரிப்பினையே கொண்டுள்ளது. பின்கூறப்பட்ட ஆண்டின் போது ப. நா. நிதியில் இருந்து பெற்ற அதிகரித்த தேறிய கடன்பாடுகளினால் ஏற்பட்டதாகும்.

நாணயக் கொள்கை

முன்பு கூறப்பட்டுள்ளதுபோல், 1978ல் எய்தப்பட்ட மிதமான நிலையினைத் தொடர்ந்து 1979 இல் நாணய விரிவாக்க வீதத்தின் குறிப்பிடத்தக்க மிதமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆண்டின் முதல் அரைப் பகுதியின் நாணய வளர்ச்சியில் ஓரளவு மிதமான போக்கு காணப்பட்டதால் அது நாணய

கொள்கையினை கடினமாக்குதலின் தேவையை தவிர்த்தது. எனவே, 1977/78 இல் புகுத்தப்பட்ட கொள்கை வழி முறைகள் முதல் எட்டு மாதங்களில் தொடர்ந்து செய்யப்பட்டன. இக் கொள்கையின் முக்கிய வழிமுறைகள் யாதெனின் 10 சதவீத வங்கி வீதம் அறவிடப்படுதலும், வர்த்தக வங்கி களுக்கான மத்திய வங்கியின் கடன்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், வரை யறை செய்யப்பட்ட எல்லைக்கு மேலாகப் பெறப்படும் கடன்பாடுகள் மீது வங்கி வீதத்துடன் தண்ட வீதமாக 15 சதவீதம் அறவிடப்படுதலும் வர்த்தக வங்கிகளின் ஒதுக்கிலிருந்து கைப் பணம் நீக்கியமையும் இன்றியமை யாதனவல்லாத நோக்கங்களுக்காக முற்பணங்கள் மீதான உச்சவரம்பினைத் தொடர்ந்தும் பேணப்பட்டமையுமேயாகும். மேலும் முதலீட்டுக்கருவிகள் புதிய வர்த்தக ஊர்திகள் ஆகியவற்றிற்கு நிதியீட்டுவதற்காக வழங்கப்பட்ட கொடுகடன்களை தவிர கடன் வழங்கல், தவணைக் கொள்வனவு நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ள வங்கியல்லா கூட்டு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட முற் பணங்களின் மீது உச்சவரம்பு விதிக்கப்பட்டது. அரச கூட்டுத்தாபனங் களுக்கும், நியதிச்சபைகளுக்கும் வழங்கப்பட்ட கொடுகடன்களின் மேல் மொத்த உச்சவரம்பு ஒன்று அரசின் வேண்டுகோளுக்கிணங்க விதிக்கப் பட்டது.

1979இன் இரண்டாம் அரைப் பகுதியில் நாணய நிலைமையில் அதிகரித்த அமுக்கங்கள் காணப்பட்டதினால் பண நிரம்பலில் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியினை மிதப் படுத்துவதற்கு வழிமுறைகள் கையாள்வது அவசிய மாயிற்று. இக்கொள்கைகளாவன நடைமுறையில் இருக்கும் கொள்கையினை சீராக்குவதற்கும் அவற்றின் செயற்றிறனை விருத்தி செய்யும் நோக்கு டனும் தேவையான இடத்து சிறிய மாற்றங்களைப் புகுத்தவும் வழிப்படுத்தப் பட்டது. அளவு கட்டுப்படுத்தல்களை மீளவும் நாடாது செலவு அடிப்படையில் ஒழுங்கு படுத்துவது உகந்ததென கருதப்பட்டது. வர்த்தக வங்கிகளின் கொடுகடன் வழங்கும்ஆற்றலை மட்டுப்படுத்தும் நோக்குடன் அவற்றிற்குரிய மத்திய வங்கியின் கொடுப்பனவுகளின் மேல், மேலும் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டன. 15 சதவீதம் கொண்ட தண்ட வீதம் வர்த்தக வங்கிகள், மத் திய வங்கியில் இருந்து அதிகளவு கடன்பாடுகளை பெறநாடுவதை தடுப்பதற் குப் போதுமான கருவியாக அமையவில்லை ஆதலால், குறுங்கால திரவத் தன்மை பிரச்சினைகளை எளிதாக முகாமைப்படுத்துவதற்கு வங்கி வீதத்தில் கிடைக்கத்தக்க மட்டத்தினை உயர்த்துவதன் மூலம் மத்திய வங்கியிலிருந்து கிடைக்கத்தக்க கொடுகடனை சீராக்க தீர்மானிக்கப்பட்ட அதே வேளையில், இவ்வெல்லைக்கு மேலான கொடுகடன் ஆர்வத்தினை கட்டுப்படுத்தும் நோக்கில் அத்தகைய கொடுகடன்களுக்கு படிப்படியாக உயர்ந்து செல்லும் தண்ட வீதங் கள் விதிக்கப்பட்டன. செத்தெம்பர் 4ஆம் நாள் தொடக்கம் வங்கி வீதத்தில் கிடைக்கும் கடனின் தொகையில் ரூ. 4020 இலட்சத்திலிருந்து ரூ. 6130 இலட் சத்திற்கு உயர்த்தப்பட்டது. இத்தொகையில் 1979 யூன் 30இல் வெளிநின்ற தெரிந்தெடுக்கப்பட்ட வங்கிச் சொத்துக்களின் 4 சதவீதமான ரூ. 4030 இலட் சத்தைக்கொண்ட பொதுக்கடனையும் 1978 திசெம்பர் 31இல் வெளிநின்ற ஏற்றுமதிக் கொடுகடன் அடிப்படையில் பங்கிடப்பட்ட ரூபா 2100 இலட்சம் கொண்ட ஏற்றுமதிக்கொடுகடன் மீள நிதியிடலை உள்ளடக்குகிறது. எல்லை களுக்கும் மேலான மிகையான கடன்பாடுகட்கு பின்வரும் தண்ட வீதங்கள் ஏற் புடையதாகின்றன. முதல் 10 சதவீதத்திற்கு, 15 சதவீதம், இரண்டாவது 10 சதவீதத்திற்கு 16 சதவீதம், மூன்றாவது 10 சதவீதத்திற்கு 18 சதவீதம், நான்

காவது 10 சதவீதத்திற்கு 20 சதவீதம் ஐந்தாவது 10 சதவீதத்திற்கு 22 சதவீதம் அதன் மேல், ஆண்டு ஒன்றுக்கு 25 சதவீதம் என்ற வகையில் படிப்படியாக அதிகரித்துச் செல்லும் தண்ட வீதங்களில் அறவிடப்பட்டன.

படிப்படியாக உயர்ந்து செல்லும் தண்ட வீதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை தண்ட வீதங்களில் பெரும்பாலான வங்கிகள் மத்திய வங்கியிலிருந்து கடன் பெறும் ஆர்வத்தைக் குறைப்பதன் காரணமாக அவ்வங்கிகள் தம்கொடுகடன் பெருக்கும் இயலளவினைக் குறைத்துக்கொண்டன. எடுத்துக்காட்டாக ஓகத்தில் முடிவடைந்த எட்டு மாதகாலப்பகுதியில் ரூ. 2820 இலட்சம்கொண்ட தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடனில் சராசரி மாதாந்த அதிகரிப்பு 1979இன் திசம்பர் முடிவடைந்த நான்குமாத காலப்பகுதியில் ரூ. 780 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

1979இன் முதல் அரையாண்டில் வர்த்தக வங்கிக் கொடுகடன்களுக்கு அரச கூட்டுத்தாபனங்களில் இருந்த அதிகரித்த கேள்விகள் இருந்ததால் இரு அரசதுறை வங்கிகளும் உச்சவரம்பிற்கு மேலாகக் கடன் அளிப்பதற்கு கடப்பாடு உடையவையென உணர்ந்தன. எனவே அரச கூட்டுத்தாபனங்களுக்குரிய கொடுகடனில் உச்ச வரம்பு செத்தெம்பர் 4இல் இருந்து நீக்கப்பட்டது. தனியார் துறையில் இருந்து கிடைக்கக்கூடிய வர்த்தக வங்கியின் மூலவளங்களின் பெருமளவைக்கவர்வதில் இருந்து அரச கூட்டுத்தாபனங்களைத் தடுப்பதற்கு சிறந்த நடவடிக்கைக்கான தேவை இன்னமும் இருந்ததால் பொது திறைசேரியின் அரசாங்க முயற்சிகள் பிரிவு அரச கூட்டுத்தாபனங்களின் கடன் தொழிற்பாடுகளின் மேல் கடுமையான கட்டுப்பாட்டை செலுத்துமாறு வேண்டப்பட்டது.

ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகள் இருந்திருக்கக்கூடிய வீதத்திலும் பார்க்க குறிப்பிடத்தக்களவு குறைவான மட்டத்தில் பண நிரம்பலின் வளர்ச்சி நிலையை பேணுவதற்கு ஏதுவாயிற்று. திசம்பரில் மட்டும் பண நிரம்பலில் 6சதவீதத்தால் புள்ளிகள் அதிகரித்தமை எதிர்காலத்தில் நாணய நிலைமை கவனமாக நோக்கப்படவேண்டியதன் இன்றியமையாமையை எடுத்துக் காட்டியது. வெளிநாட்டு வங்கித் தொழில் வளர்ச்சியும் அரச இறைத் தொழிற்பாடுகளின் விரிவுத் தாக்கமுமே நாணய விரிவிற்கு அடிப்படைக் காரணிகளாதலால் தனியார் துறைத் தொழிற்பாடுகளை மோசமாக்கியிருக்கும் எனக்கருதப்பட்டதால் மேலும் நாணய வழிமுறைகள் உடனடியாக மேற்கொள்வது ஏற்றதாக கருதப்படவில்லை.